சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.

அசல் வழக்கு எண். **228/2022**

வா.சா.**1-** மணிமேகலை, நாள் **- 26.06.2024.**

<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு, **1** ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

நான் யார் மீது வழக்குப் போட்டுள்ளேன் என்றால் அண்ணன், தங்கை மீது பாகப்பிரிவினை கோரி வழக்குப் போட்டுள்ளேன். சொத்தின் சர்வே எண் படிக்காததால் தெரியாது. எத்தனை சென்டு என்று தெரியாது என்றால் சரிதான். நான்குமால் தெரியாது என்றால் ஒவ்வொரு வழக்குச் சொத்தும் பிரிந்து பிரிந்து 4 இடங்களில் உள்ளன. என் அண்ணன்தான் உழுது வருகிறார் என்றால் எங்களுக்குள் பங்கு உள்ளது. என் அப்பா எப்போது இறந்தார் என்றால் வருடம் தெரியாது. 2000 ஆம் ஆண்டில் என் அப்பாவிற்கு நோய்வாய்ப்பட்டு இருந்தார் என்றால் சரியல்ல. நடந்துகொண்டுதான் இருந்தார். தாவா சொத்துக்கள் என் அப்பா மற்றும் அம்மா சொத்துக்கள் என்றால் சரிதான். 2000 ஆம் ஆண்டில் என் அப்பாவால் விவசாயம் செய்யமுடியாததால், பெண் பிள்ளைகளுக்கு சீர்வரிசை செய்து, திருமணம் செய்துவிட்டதாலும், தாவா நிலங்களை என் அண்ணனிடம் வாய்மொழியாக தானமாக கொடுத்துவிட்டார் என்றால் அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை. தானம் கொடுத்தது தெரியும் என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணன், அப்பா மற்றும் அம்மாவை கவனிக்கவில்லை. 2000 ஆம் ஆண்டிலிருந்து தற்போதுவரை என் அண்ணன்தான் அனுபவிக்கிறார் என்றால் சரியல்ல. என் தங்கை என்னுடன் சேர்ந்து வழக்குத் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு பங்கு கொடுக்காததால் நான் வழக்குப் போட்டுள்ளேன். என் அண்ணன் பக்கம் உரிமையுள்ளதால் என் தங்கை என்னுடன் சேர்ந்து பங்கு கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மையாக வழக்குத் தாக்கல் செய்திருந்தால் என் தங்கையும் என்னுடன் சேர்ந்து வழக்குத் தாக்கல் செய்திருப்பார் என்றும், பொய் என்பதால்தான் என் தங்கை என்னுடன் சேர்ந்து வழக்குத் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா, அம்மா மற்றும் என் அண்ணன் சீர்வரிசைகள் செய்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாவா

சொத்துக்களை உண்மையில் அனுபவிக்காததால்தான் சர்வே எண் மற்றும் நான்குமால் தெரியவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் அனுபவிக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை நான் அனுபவிக்காததால் நீதிமன்றக் கட்டணம் 37(1) இன் கீழ்தான் கட்டணம் செலுத்தவேண்டும் என்றும், நான் செலுத்திய கட்டணம் போதுமானதாக இல்லை என்பதால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. ஏற்கனவே, என் தகப்பனார் என் சகோதரருக்கு வாய்மொழியாக தானம் கொடுத்த சொத்தை பாகம் கேட்பது கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. என் தாயார் இறக்கும்போது, 24 பவுன் தங்க நகை, 5-1/4 லட்சம் ரொக்கம் கையில் வைத்திருந்தார் என்றால் சரிதான். என் அம்மா வீட்டில்தான் இறந்தார். அம்மா இறந்தபிறகு அவருடைய நகைகள் மற்றும் பணத்தை நானும், என் தங்கையும் எடுத்துவந்தோம் என்றால் சரியல்ல. என் தாயார் இறக்கும்போது நான் அருகிலிருந்தேன் என்றால் சரிதான். அந்த நகைகள் என் அண்ணிடம்தான் உள்ளது. நான்தான் நகைகளை என் அண்ணனிடம் ஒப்படைத்தேன். என் தாயார் வட்டிக்கு கொடுத்து வைத்திருந்த 5-1/4 லட்சத்தை வசூல் செய்து என் அண்ணன் வைத்துக்கொண்டார். 1ம் பிரதிவாதிக்கு தன் தாயார் எவ்வளவு பணம் மற்றும் நகைககள் வைத்திருந்தார் என்று தெரியாது என்றாலும், நான் என் தாயார் இறக்கும்போது உடனிருந்ததால் நகைகள் மற்றும் பணத்தை நானும் என் தங்கையும் எடுத்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. நகை மற்றும் பணத்திற்கும், 1ம் பிரதிவாதிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. வீரணன் மகன் பழனி, நல்லுக்காளை மகன் கர்ணன் ஆகியோர்கள் சாட்சியாவார்கள். வழக்கிற்காகவும், பணத்தையும், நகைகளையும் பிரதிவாதி வசம் இருப்பதாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. பங்கு கேட்பது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம் / P.S. ரஸ்கின் ராஜ், 26.06.2024.

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.